செய்தி வெளியீடு எண்: 355 நாள் : 17.07.2016

# செய்தி வெளியீடு

தேசிய கண்ணொளி இழப்பு தடுப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் கண்புரையால் ஏற்படும் பார்வை இழப்பை தடுக்கும் வகையில் கண்புரை அறுவை சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 5.5 லட்சம் நபர்களுக்கு இந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. பார்வை இழப்பை, குறிப்பாக கண்புரையால் ஏற்படும் பார்வை இழப்பை தடுப்பதில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக உள்ளது. இந்த ஆண்டு இதுவரை, 1.96 லட்சம் நபர்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அவர்கள் அனைவரும் பார்வையை முழுமையாக பெற்று நலமாக உள்ளனர்.

ஏழை எளியோருக்கு, எவ்வித கட்டணமுமின்றி, அரசு மருத்துவமனைகளில் கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. சேலம் மாவட்டம் மேட்டூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் சராசரியாக ஆண்டுதோறும் 928 பேர்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த 14.6.2016 முதல் 16.6.2016 வரை மேட்டூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் கண்புரை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களில் சிலருக்கு நோய் தொற்று ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்தவுடன், இந்த நாட்களில் கண்புரை அறுவை சிகிச்சை செய்து கொண்ட 23 பேர்களுக்கும் சேலம் மற்றும் கோயம்புத்தூர் அரவிந்த் கண் மருத்துவமனை, சேலம் அகர்வால் கண் மருத்துவமனை மற்றும் சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் உயர் சிகிச்சை அளிக்கப்பட்டது.

மேட்டூர் அரசு மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களில் சிலருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்தவுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிச்சாமி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு எஸ்.பி. வேலுமணி மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் ஆகியோரை சிகிச்சை பெற்று வரும் நபர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறுவதுடன், உயர் சிகிச்சைகள் தொடர்ந்து அளிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கும்படி உத்தரவிட்டார்கள்.

மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 23 நோயாளிகளில், சிகிச்சைக்குப் பின் இரண்டு நபர்களுக்கு பார்வை திரும்ப கிடைத்துள்ளது. 17 நோயாளிகளுக்கு தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், கண் சிறப்பு மருத்துவர்களின் கருத்துப்படி, மூன்று மாதங்களுக்கு பிறகே பார்வை திரும்ப கிடைப்பது குறித்து தெரிய வரும். நான்கு நோயாளிகளுக்கு இன்னும் தொற்று முழுவதுமாக நீங்கவில்லை என்பதால் அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மேட்டூர் அரசு மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை மேற்கொண்டு தொற்று பாதிப்பு ஏற்பட்ட 23 நபர்களுக்கும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், பார்வை பாதிக்கப்பட்ட 21 பேர்களுக்கு மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

* * * * *

**வெளியீடு:- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.**

**நாள்:- 17.7.2016.**